# மத்திய கிழக்கில் சர்வாதிகார மன்னர்களை ஊக்குவித்த பிரிட்டிஷ் மகாராணி

# இலட்சக்கணக்கானவர்களின் அடிப்படை மனித உரிமை மற்றும் சுதந்திரம் என்பனவற்றை பறித்தவர்

## லத்தீப் பாரூக்

பிரிட்டிஷ் அரச பரம்பரையில் ஆகக் கூடுதலான காலப்பகுதியான 64 வருடங்களும் ஏழு மாதங்களும் அரியாசனத்தில் இருந்த இரண்டாவது எலிஸபெத் மகாராணி 2022 செப்டம்பர் 8ல் தனது 96வது வயதில் மரணம் அடைந்தார். நீண்ட இரங்கல் நிகழ்வுகளின் பின், கடந்த திங்கள் கிழமை 19ம் திகதி அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன. நூற்றுக்கணக்கானவர்கள் இதில் பங்கேற்றனர்.

உலகின் மிகவும் பலம்பொருந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியாக அவர் காணப்பட்டார். இந்த வர்க்கம் தான் பூகோள பொருளாதாரத்தை வடிவமைக்கும் சக்தியாகவும் இருந்தது இன்னமும் இருக்கின்றது. அத்தோடு பலவிதமான மர்ம அமைப்புக்களுக்கும் மகாராணி தலைமை தாங்கி உள்ளார். இந்த அதிகார வர்க்கத்தால் கையாளப்படும் மேலைத்தேச ஊடகங்கள் மகாராணி இறந்தது முதல் அடக்கம் செய்யப்படும் வரையான அனுதாப காலம் முழுவதையும் அவர் பற்றியும் அவர் மகிமை பற்றியும் பேசுவதிலேயே கழித்தன.

ஆனால் மத்திய கிழக்கிலும் ஆபிரிக்காவிலும் வாழும் பல்வேறு பிரிவு மக்களின் உணர்வுகள் இந்த விடயத்தில் மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசங்களில் வாழும் இலட்சக்கணக்கான மக்களை அடக்கி ஆளும் அந்தந்த நாடுகளின் சர்வாதிகரிகளோடு இறுக்கமான உறவுகளைப் பேணி அந்த மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதை அவர் கண்டும் காணாமல் இருந்தார்.

மத்திய கிழக்கைப் பொருத்த மட்டில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாத சக்தி தான் அங்கு இஸ்ரேல் என்ற சட்டத்துக்கு விரோதமான வன்முறை அரசு நிறுவப்பட மூல காரணமாகத் திகழ்ந்தது. அந்தப் பகுதியில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த பலஸ்தீன மக்கள் அங்கிருந்து பலவந்தமாக அடித்து விரட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டும் தான் இஸ்ரேல் என்ற நாடு அங்கு நிறுவப்பட்டது. இன்று வரை அங்கு பலஸ்தீன மக்கள்

மிகவும் கொடூரமாக நடத்தப்பட்டு வருகின்றனர். பலஸ்தீனர்களுக்கு எதிரான இந்த கொடுமையான வன்முறைகள் அனைத்தையும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த பிரிட்டிஷ் அரசுகள் அங்கீகரித்தே வந்துள்ளன.

அதேபோல் முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் மத்திய கிழக்கு பிராந்தியம் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதும் அந்தப் பிராந்தியம் முழுவதும் துண்டாடப்பட்டு மக்களுக்கு விரோதமான சர்வாதிகார போக்கு மன்னர்களை அந்த நாடுகளில் ஆட்சி பீடத்தில் அமரச் செய்ததும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசுதான். இந்த கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் பிரிட்டிஷ் சிம்மாசனம் வழங்கியது.

"இரண்டாவது எலிஸபெத் மகாராணியும் முடியாட்சி துடைத்தெறியப்படுதலும்" என்ற தலைப்பில் பத்தி எழுத்தாளர் ஜோய் கில் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் பிரிட்டனின் மன்னராட்சி முறை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு ஆற்றிய பங்களிப்பில் இருந்து ஒரு புறநிலை பார்வையாக, மகாராணியின் தனிப்பட்ட குணாதிசயங்கள் பிரிக்கப்பட வேண்டும். மத்திய கிழக்கு முழுவதும் மன்னராட்சிகளை நிறுவி அவற்றுக்கு ஆதரவளிக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசின் கொள்கை, பிரிட்டனால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள ஜனநாயகத்துக்கான ஆதரவுடன் பார்க்கையில் விந்தையானதாக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

உதாரணத்துக்கு 1953ல் அமெரிக்க – பிரிட்டிஷ் சதிப் புரட்சிக்கும் அதற்கு முன்னரும் ஈரானின் ஷா உடன் மகாராணிக்கு இருந்த நெருக்கமான உறவுகள் நவ காலணித்துவ கொள்கைகளுக்கு மேலைத்தேச ஆதரவு சர்வாதிகாரிகள் மூலம் உயிரூட்டவும் அந்தக் கொள்கைகளை சட்டபூர்வுமாக்கவும் பிரிட்டிஷ் முடியாட்சி நடந்து கொண்ட விதத்தையும் சர்வதிகாரிகளோடு அது கொண்டிருந்த நேரடித் தொடர்புகளையும் தெளிவாக விளக்குவதாக உள்ளது.

ஈரானின் பஹ்லவி ராஜ்ஜியத்தின் மன்னர் ஷா மிகக் கொடூரமான ஒரு இரகசிய பொலிஸ் பிரிவைக் கொண்டு தனது மக்களை அடக்கி ஆண்டார். அந்த நாட்டின் அப்போதைய தெரிவு செய்யப்பட்ட பிரதமர்,; மத்திய கிழக்கில் பிரிட்டனின் மிகவும் முக்கியமான மூலோபாய எண்ணெய் விநியோகப் பிரதேசத்தை கொண்டிருந்த ஈரானின் எண்ணெய் உற்பத்தித் துறையை தேசிய மயமாக்கியதால் தான் ஷா பிரிட்டனால் அங்கு மன்னர் பதவியில் அமர்த்தப்படார். அவர்

பாதுகாப்பாக அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டதும் மீண்டும் அவர்களின் எண்ணெய் வருமானம் செழிப்படையத் தொடங்கியது. 1959ல் மன்னர் ஷா வை மகாராணி எலிஸபெத் தனது அரச விருந்தாளியாக அழைத்து கௌரவித்தார். பின்னர் 1961ல் ஷா வின் விருந்தாளியாக மகாராணியும் ஈரான் சென்றார். அதன் பிறகு பல்வேறு அரச மட்ட விஜயங்கள் இடம்பெற்றதோடு உறவுகள் மிகவும் சுமுகமான் நிலையில் பேணப்பட்டு வந்தன.

1953 சதியை மகாராணி அங்கீகரிக்கவில்லை என்பது என்னவோ உண்மைதான். அது அன்றைய பிரிட்டிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சேர்ச்சில் அமெரிக்க ஜனாதிபதி இஸன்ஹோவர் ஆகியோரால் திட்டமிடப்பட்டது. ஆனால் அதனை அடுத்து வந்த தசாப்தங்களில் ஷா மற்றும் அவரது மனைவியுடன் தனிப்பட்ட உறவுகளை மேற்கொண்டு ஈரானுடன் உறவுகளை மேம்படுத்த மகாராணி பெரும் ஆதரவளித்தார்.



***சர்வாதிகாரி ஷா உடன் மகாராணி எலிஸபெத்***

1979ல் ஈரானில் மக்கள் புரட்சி மூலம் ஷா பதவியில் இருந்து துரத்தப்படும் வரை இந்நிலை தொடர்ந்தது.

பிரிட்டன் தனது ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மத்திய கிழக்கில் தொடர்ந்தும் நிலை நிறுத்த முயன்றது. எகிப்து, ஈராக், ஜோர்டான், லிபியா, வளைகுடா அமீரகம் என எல்லா இடங்களிலும் தன்னால் பதவிகளில் அமர்த்தப்பட்டவர்கள் மூலம் தனது ஆதிக்க மேலாண்மையை நீடிக்க நினைத்தது. எவ்வாறாயினும் கடந்த காலங்களில் இடம்பெற்ற காலணித்துவத்துக்கு எதிரான புரட்சிகளின் போது இந்த ஆட்சிகள் பல

கவிழ்த்தப்பட்டன. இது பிரிட்டனுக்கு இந்தப் பிராந்தியங்களில் ஏற்பட்ட பெரும் அவமானமாகும்.

சர்வாதிகாரப் போக்குடைய ஒரு வகையான மாதிரி ராஜதந்திரத்தைப் பேணுவதில் மற்றும் சவூதி, ஐக்கிய அரபு அமீரகம், ஓமான் உற்பட பல நாடுகளின் அரசுகளோடு உறவுகளைப் பேணுவதிலும் பிரிட்டிஷ் அரச குடும்பம் முக்கியமான பங்களிப்பை செலுத்தி வருகின்றது. காரணம் இந்த நாடுகளும் அரசுகளும் தான் தத்தமது பிராந்தியங்களில் மேலைத்தேச பொருளாதார நலன்களைப் பேணுவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. மேலும் இவைதான் பிரிட்டிஷ் பொருளாதாரத்துக்கு பில்லியன் கணக்கான தொகை பணத்தையும் வாரி இறைத்து வருகின்றன. கண்ணுக்குப் புலப்படாத வருமானங்கள் மூலமும், பிரிட்டனில் பெறுமதிமிக்க சொத்துக்களை வாங்கிக் குவிப்பதன் மூலமும் அங்குள்ள பிரபலமான பிரீமியர் லீக் உதைபந்தாட்டக் கழகங்களை வாங்குவதன் மூலமும் இந்த வருமானங்கள் பிரிட்டனுக்கு கிடைக்கின்றன.

பிரிட்டிஷ் ஆயுதப் படைகளின் பிரதான கட்டளையிடும் தளபதி என்ற வகையில் மகாராணி, மத்திய கிழக்கில் பிரிட்டன் மேற்கொண்ட எல்லா யுத்தங்களுக்கும் அனுமதி அளித்துள்ளார். முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளாயர் மற்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அகியோர் தலைமையில் ஈராக் நாசமாக்கப்பட்டது. பத்து லட்சத்தக்கும் அதிகமான அப்பாவி பொது மக்கள் அங்கே கொன்று குவிக்கப்பட்டனர். அந்த வகையில் டொனி பிளாயர் ஒரு முழு அளவிலான யுத்தக் குற்றவாளி. ஆனால் அவருக்கு அதி உயர் விருது வழங்கி மகாராணி எலிஸபெத் கௌரவித்திருந்தார்.

இன்றைய மன்னர் சார்ள்ஸ் பல தடவைகள் வளைகுடா பிராந்தியத்துக்கு விஜயம் செய்துள்ளார். யெமன் தேசத்தில் கொடூரமானதோர் யுத்தத்தை தொடுத்துள்ள சவூதி அரேபிய அரசுக்கு பிரிட்டனின் ஆயுதங்கள் தொடர்ந்து கிடைக்க வழியமைக்கப்பட்டுள்ளது. இதுவரை யெமனில் மேற்கொள்ளப்பட்டுள்ள விமானத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் செயற்பாடுகளில் இன்று வரை இந்த விடயம் பற்றி பேசப்பட்டதே இல்லை. அவர்கள் அதை கண்டு கொள்வதும் இல்லை.

இவற்றுக்கு பதிலீடாக மத்திய கிழக்கின் இந்தக் கொடுங்கோல் ஆட்சியாளர்கள் பிரிட்டிஷ் மகாராணிக்கு விலைமதிப்பற்ற பரிசுகளை

வழங்கி கௌரவித்துள்ளனர். றைஹானுத்தீன் என்ற பத்தி எழுத்தாளர் தந்துள்ள தகவலின் படி மகாராணி விலைமதிப்பற்ற வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்த பல அன்பளிப்புக்களைப் பெற்றுள்ளார்.



***பெர்கிங்ஹம் அரண்மணையில் 2007 அக்டோபரில் சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாஹ்வும் பிரிட்டிஷ் மகாராணியும் சந்தித்துக் கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்***

இவற்றுள் எலிஸபெத் மகாராணியின் திருமணத்தின் போது 1947ல் அன்றைய எகிப்திய மன்னர் பாரூக் வழங்கிய பரிசு மிகவும் பெறுமதி மிக்கதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கி;.மு 250 ம் ஆண்டு காலப்பகுதிக்கு உரிய தங்க நாணயக் குற்றிகள் அவற்றோடு இணைந்த தங்க வேலைப்பாடுகள் அமைந்த நகை மன்னர் பாரூக்கால் வழங்கப்பட்டது. இந்த தங்க மாலையும் அதில் உள்ள தங்க நாணயக் குற்றிகளும் கிறிஸ்துக்கு முந்திய மூன்றாம் நூற்றாண்டு காலத்தக்குரியவை எனத் தெரிய வந்துள்ளது.

1965இல் சூடான் இரண்டு தீக்கோழி முட்டைகளை சிவப்பு, மஞ்சள், நீலம் மற்றும் பச்சைக் கண்ணாடி மணிகளால் சுற்றப்பட்ட தட்டில் வைத்து மகாராணிக்கு பரிசாக வழங்கியது. மன்னர் பைஸால் விலைமதிப்பற்ற 300க்கு அதிகமான வைரங்கள் மற்றும் பெறுமதிமிக்க வேறு வகையான பல மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட மொத்தம் 80 கெரட் எடைகொண்ட கற்கள் பதிக்கப்பட்ட நெக்லஸ் ஒன்றை வழங்கினார்.



***அன்றைய எகிப்திய மன்னர் பாரூக்கால் பிரிட்டிஷ் மகாராணிக்கு வழங்கப்பட்ட திருமண பரிசு.***

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷேக் தங்கத்தினால் வார்க்கப்பட்ட ஒரு ஒட்டகமும் இரண்டு பேரீச்சம் பழ மரங்களும் அந்த மரங்களில் பழங்களாக வடிவமைக்கப்பட்ட ரூபி மாணிக்கக் கற்களும் உள்ளடங்களாக அடங்கிய நினைவுப் படிகத்தோடு வைரக்கற்கள் மற்றும் நீலக் கற்கள் பதிக்கப்பட்ட நகைகளையும் பரிசாக வழங்கினார்

இதனிடையே ஆயிரக்கணக்கான ஆபிரிக்க மக்கள் உயிரிழக்கக் காரணமாக இருந்த பிரிட்டிஷ் பேரரசின் அடிமை வர்த்தகம் பற்றி பல வித்தியாசமான கருத்துக்கள் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளன. பிரிட்டன் தான் அடிமை வர்த்தகத்தில் ஈடுபட்ட மிகவும் வெற்றிகரமான ஒரு நாடு. 1640க்கும் 1807க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 31 லட்சம் பேரை பிரிட்டன் அடிடைமகளாக விற்றுள்ளது. இவர்களில் 27 லட்சம் பேர் அதன் காலணித்துவத்தின் கீழ் இருந்த கரீபியன் பகுதிகளுக்கும், வடக்கு மற்றும் தெற்கு அமெரிக்கப் பகுதிகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அழைத்து வரப்பட்டதாக தகவல்கள் உள்ளன.



***தங்கத்தினால் வார்க்கப்பட்ட ஒரு ஒட்டகமும் இரண்டு பேரீச்சம் பழ மரங்களும், அந்த மரங்களில் பழங்களாக வடிவமைக்கப்பட்ட ரூபி மாணிக்கக் கற்களும் உள்ளடங்களாக ஷேக் றாஷிட் பின் சயீத் அல் மக்தூமால் மகாராணிக்கு வழங்கப்பட்ட ஒரு பரிசு***

தனது 70 வருட கால ஆட்சியில் மகாராணி எலிஸபெத் தனது முன்னோர்கள் மற்றும் குடும்பத்தவர்கள் அடிமை வர்த்தகத்துக்காகவும், காலணித்துவத்துக்காகவும் நாடுகள் மீது படையெடுப்பு நடத்தி உலக மக்களுக்கு செய்த  கொடுமைகளுக்காக ஒரு போதும் வருத்தம் தெரிவித்ததில்லை. அதைப் பற்றி அவர் அலட்டிக் கொண்டதும் இல்லை.

உலகப் புகழ்n பற்ற கென்யா எழுத்தாளர் நகாயி இன் புத்திரரும் பிரபல எழுத்தளரும் கோர்னல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான முகாய் டயிள்யூ.ஏ. நகாயி கூட ஆபிரிக்காவில் பிரிட்டிஷ் மகாராணியின் ஆதிக்கத்தின் சட்டபூர்வ தன்மையை கேள்விக்கு உற்படுத்தி உள்ளார்

“மகாராணி அடிமைத்தனத்துக்காகவும், காலணித்துவத்துக்காகவும், நவ காலணித்துவத்துக்காகவும் மன்னிப்புக் கேட்டிருந்தால் அவரின் பெயராலும் அவரின் முன்னோர்கள் பெயராலும் கொல்லப்பட்ட உயிர்களுக்கான நட்டஈடுகளை வழங்குமாறு தனது அரசுக்கு உத்தரவிட்டிருந்தால் ஒரு வேளை நான் இப்போது கவலை அடைந்திருக்கலாம்”   என்று தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் ஒரு கென்யா பிரஜை என்ற வகையில் எனக்கு எந்த உணர்வும் இல்லை. இன்றைய திரைஅரங்கு அபத்தமானது என்று அவர் தனது செய்தியை முடித்துள்ளார்.

இந்தியாவின் முக்கிய அரசியல்வாதிகளில் ஒருவரும், எழுத்தாளரும், புத்திஜீவியும், ராஜதந்திரியும் பெரும்பாலும் காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவராகவும் வரும் வாய்ப்புள்ளவரான சஷி தரூர் “என்னுடைய பணிவான கருத்தின் படி மேன்மை தங்கிய மகாராணி எலிஸபெத் அதிக சௌகரியங்களோடு வாழ்ந்தாலும் கூட அவர் தங்கக் கூண்டில் அடைக்கப்பட்ட ஒரு பறவை. அவர் பிரிட்டனின் காட்டுமிராண்டித் தனத்தை கண்கூடாகக் கண்டவர். இருந்தாலும் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை” என்று குறிப்பிட்டுள்ளார். ***(முற்றும்)***